Embassy of the United States of America
Colombo

# PRESS RELEASE

Public Affairs Section
Tel: +94 (1) 249-8100 ● Fax: +94 (1) 244-9070
Email: shenjy@state.gov ● http://srilanka.usembassy.gov

Release No. 20170426T

## புத்தாக்கத்திற்கும், வளர்ச்சிக்கும் புலமைச்சொத்து பாதுகாப்பினை சுட்டிக்காட்டும் அமெரிக்க-இலங்கை நிபுணர்கள்

**கொழும்பு, ஏப்ரல் 26, 2016:** இலங்கையின் புலமைச்சொத்து முயற்சிகளை வலுப்படுத்துவதற்கு ஆதரவளிக்கும் வகையில் உலக புலமைச்சொத்து தினமான இன்று உலகெங்கிலும் உள்ள புலமைச்சொத்து உரிமைகள் தொடர்பான நிபுணர்கள் கொழும்பில் ஒன்று கூடினர். இலங்கை மக்களுக்கு புத்தாக்கம் மற்றும் புலமைச்சொத்து பாதுகாப்பின் பொருளாதார பயன்களை சுட்டிக்காட்டி இந்த வாரம் நடைபெற்ற பல்வேறு செயலமர்வுகளின் அங்கமாக இந்த நிகழ்வு அமைந்திருந்தது.

''*புலமைச்சொத்து உரிமைகளானது கண்டுபிடிப்பாளர்கள், கலைஞர்கள் மற்றும் எழுத்தாளர்களின் ஆக்கப்பூர்வ முயற்சிகளுக்கு விருதாக இருக்கின்றது. அது ஆய்வு மற்றும் புத்தாக்கத்தை ஊக்குவிக்கின்றது. புதிய தொழில்களை உருவாக்குகின்றது. அத்துடன், வாழ்க்கையை மேம்படுத்துகின்றது*'' என கொழும்பில் அமைந்துள்ள அமெரிக்கத் தூதரகத்தின் பொருளியல் பிரிவின் பிரதானி பார்த்தா மஷூம்டர் தெரிவித்தார். ''*சில சந்தர்ப்பங்களில் புலமைச்சொத்து பாதுகாப்பானது வாழ்க்கையை காப்பாற்றுவதற்கான புதிய படைப்புக்களின் கண்டுபிடித்தலையும் தூண்டுகின்றது*'' என அவர் மேலும் குறிப்பிட்டார்.

அமெரிக்க வர்த்தகத் திணைக்களத்தின் வர்த்தகச் சட்ட அபிவிருத்தி நிகழ்ச்சி (CLDP) மற்றும் அமெரிக்காவின் காப்புரிமை மற்றும் வணிகக் குறியீட்டு அலுவலகம் (USPTO) இணைந்து இந்த நீண்ட செயலமர்வுகளை ஐக்கிய நாடுகளின் உலக புலமைச்சொத்து நிறுவனம் (WIPO), இலங்கை தேசிய புலமைச்சொத்து அலுவலகம் (NIPO) மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு என்பவற்றின் ஒருங்கிணைப்புடன் ஒழுங்கு செய்திருந்தது.

தாமாகவே, எதிர்காலத்தில் பொது மக்கள் விழிப்புணர்வு மற்றும் தொழில்நுட்ப உதவியை முன்னெடுப்பதற்கான NIPOஇன் ஆற்றலை அதிகரிப்பதற்கு இந்த அமர்வுகள் இலக்கு வைத்திருந்தன. அதேவேளை, இலங்கையின் முன்னணி பல்கலைக்கழகங்கள், ஆய்வு நிறுவனங்கள், தனியார் துறை மற்றும் அரசாங்கத்தினைச் சேர்ந்த கொள்கை மற்றும் தொழிநுட்ப நிபுணர்கள் பல்கலைக்கழக தொழிநுட்ப பரிமாற்றங்களை முன்னிறுத்துவதற்கான, புத்தாக்கத்தையும், வர்த்தகமயமாக்கலையும் ஊக்குவிப்பதற்கான சிறந்த பயிற்சிகளை கற்றுக் கொண்டனர்.

''*பல்கலைக்கழக வர்த்தகத் தொடர்புகளை விருத்திசெய்யும் செயற்பாட்டில் நாம் தற்போது ஈடுபட்டுள்ளோம். எனவே, பொருளாதார அபிவிருத்திக்கு இந்த அறிவினை பயன்படுத்துவது மிகவும் முக்கியமாகும்*'' என யாழ் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஏ. அற்புதராஜா தெரிவித்தார்.

# # #

**படவிளக்கம்:** ''புலமைச்சொத்து உரிமைகளானது கண்டுபிடிப்பாளர்கள், கலைஞர்கள் மற்றும் எழுத்தாளர்களின் ஆக்கப்பூர்வ முயற்சிகளுக்கு விருதாக இருக்கின்றது. அது ஆய்வு மற்றும் புத்தாக்கத்தை ஊக்குவிக்கின்றது. புதிய தொழில்களை உருவாக்குகின்றது. அத்துடன், வாழ்க்கையை மேம்படுத்துகின்றது'' என அமெரிக்கத் தூதரகத்தின் பொருளியல் பிரிவின் பிரதானி பார்த்தா மஷூம்டர் தெரிவித்தார்.

**படவிளக்கம்:** இலங்கையின் முன்னணி பல்கலைக்கழகங்கள், ஆய்வு நிறுவனங்கள், தனியார் துறை மற்றம் அரசாங்கத்தினைச் சேர்ந்த கொள்கை மற்றும் தொழிநுட்ப நிபுணர்கள் பல்கலைக்கழக தொழிநுட்ப பரிமாற்றங்களை முன்னிறுத்துவதற்கான, புத்தாக்கத்தையும், வர்த்தகமயமாக்கலையும் ஊக்குவிப்பதற்கான சிறந்த பயிற்சிகளை கற்றுக் கொண்டனர்.

**படவிளக்கம்:** அமெரிக்க வர்த்தகத் திணைக்களமானது இந்த நீண்ட செயலமர்வுகளை ஐக்கிய நாடுகளின் உலக புலமைச்சொத்து நிறுவனம் (WIPO), இலங்கை தேசிய புலமைச்சொத்து அலுவலகம் (NIPO) மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு என்பவற்றின் ஒருங்கிணைப்புடன் ஒழுங்கு செய்திருந்தது.

**Approved:**

**Drafted:** Colombo, Joshua Shen x 8113

**Cleared:** PAO – JRusso (ok)
ECON – PMazumdar (ok)
COMMERCE/USPTO – JHomann (ok)
DCM – (ok)